
கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!
இயேசு
உங்களை
நேசிக்கிறார்
மே, 2026
கர்த்தர் யார்
எனப் புரிந்து கொள்ளுதல்!
MAY 2026

சிறப்புச் செய்தி

கர்த்தர் யார்?

எனப் புரிந்து கொள்ளுதல்!



"ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல்,

எழுந்து புறப்பட்டு, பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப்போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான்." -ஆதியாகமம் 28:1,2

யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி,

ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான்.

அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.



சகோதரன் J. ஆலன்பால்

உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்."

-ஆதி. 28:10-14

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, விசேஷவிதமாகக் கர்த்தர் யாக்கோபுக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். ஆவிக்குரிய உலகத்தில் நடக்கிற காரியங்களை நேரடியாகப் பார்க்க முடியாத நேரத்தில், நமக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணுகிறார். நீங்கள் Apple Smart watch வைத்திருந்தீர்களானால் அதில் உங்கள்



தூக்கத்தை அது கணக்கிட்டுக் காட்டும்.

1. Rem sleep - உங்கள் நினைவுகள் ஓடிக்கொண்டிருக்கும்போது உண்டாகிற தூக்கம்

2. Core sleep

3. Deep sleep - ஆழ்ந்த உறக்கம்.

ஆழ்ந்த உறக்கம் உறங்குவது ஒவ்வொரு நபருக்கும் 1.30 மணி நேர அளவுதான் இருக்கும். 1.30 மணி நேரம் மட்டும்தான் நாம் அயர்ந்து தூங்குகிறோம். அந்த அளவுக்கு நமக்குக் கவலை இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். அதிகமான நேரம் நாம் ஆழ்ந்த உறக்கம் உறங்கினால் அடுத்த நாள் உற்சாகமாக இருக்க முடியும். கவலையின்றி வாழ்ந்தால் நல்ல தூக்கம் கிடைக்கும். இது ஒரு இரகசியம்!

ஆழ்ந்த உறக்கத்தில் நீங்கள் உங்கள் சுயசித்தத்தின்படி எதையும் செய்யமாட்டீர்கள். அந்த வேளையில் கர்த்தர் control எடுத்து உண்மையில் நடப்பதைக் காட்டுகிறார். சில நேரங்களில் உவமைகளில் காட்டுகிறார்.

1. நடப்பதைக் காட்டுவார்!

2. உவமையில் காட்டுவார்!

பார்வோனுக்கு வந்த சொப்பனத்தில் முதலில் நல்ல ஏழு மாடுகள் ஏறி வந்தது. பின்பு மெலிந்த ஏழு மாடுகள் ஏறி வந்தது. அதைப்போல நல்ல கதிர்கள், சாவியான கதிர்கள் எனச் சொப்பனத்தில் காண்பித்தார். இத்தனை ஆண்டுகளுக்குப் பஞ்சம் இருக்கப் போவதைத் தேவன் உவமையில் காட்டினார். சத்துருக்களுக்குத் தெரியாமல் தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டும் காண்பிப்பதற்காக உவமையின் மூலம் காட்டினார்.

ஆகவே பிசாசுக்குச் சிலவற்றைப் புரிந்துகொள்ள முடியாது. ஆண்டவர் அப்படிப்பட்ட trackல் காட்டுகிறார்.

நீங்கள் பிசாசுக்கு இடம் கொடுத்தால் உங்கள் மனதில் இருக்கிற காரியங்களைப் பிசாசு தெரிந்து

கொள்வான். பிசாசுக்கு இடம் கொடுக்கவில்லையென்றால் உங்களுடைய மனது அவனுக்குத் தெரியாது. அது இரகசியமாய் இருக்கும்.

நீங்கள் ஏதாவது ஒரு திட்டம் போட்டுக் கொண்டிருப்பீர்கள். அது உங்கள் சித்தப்பா வீட்டில் நடக்கும் அல்லது உங்கள் எதிர் வீட்டுக்காரர்கள் அதை அப்படியே செய்வார்கள். அந்நிய தேவர்களுடைய கிரியைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

வேண்டாத பயமே பிசாசு கிரியைச் செய்வதற்கு இடமாக இருக்கலாம். பயம் வேதனையுள்ளது. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். நீங்கள் எந்நாளும் நிலைக்கப் போகிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் சமாதானமாக வாழுவீர்கள்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் மனுமக்களுக்கு எவ்வளவு தூரத்திலிருந்தார் என அறிந்து கொள்ளுங்கள்!

''அங்கே அவன் ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.''

-ஆதி. 28:10-14

'கர்த்தர் யார்' என்று முதலாவது அறிந்துகொள்ளுங்கள். ஆபிரகாமின் தேவன்தான். உடன்படிக்கைப் பண்ணினார். ஈசாக்கின் தேவன்தான். ஈசாக்கிடம் பேசினார். ஆனாலும் கர்த்தர் யாக்கோபோடு பேச ஆரம்பித்தபொழுது, எவ்வளவு தூரம் தள்ளி நிற்கிறார் என்பதைக் கண்டறியுங்கள். கர்த்தர் பரலோகத்தில் நின்றுகொண்டு இருக்கிறார். ஏணி இருக்கிறது. அதில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களாகவும் இறங்குகிறவர் களாகவும் இருக்கிறார்கள். யாக்கோபு பூமியில் இருக்கிறார். யாக்கோபு சரியான ஸ்திதியை அடையாமல் இருக்கும்பொழுது, கர்த்தர் அருகில் வந்தால் யாக்கோபுக்கு damage உண்டாகும். சாதாரணமாக welding வைப்பதைப் பார்த்தால் கண்களில் பார்க்கும் திறன் கெட்டுப் போகிறது. ஆகவே



அதற்காகப் பாதுகாப்பான கருப்புக் கண்ணாடியை கண்களில் அணிந்துதான் welding வைப்பார்கள்.

சாதாரண weldingஐ பார்த்தாலே கண்கள் பாதிக்கும் என்றால் கர்த்தரைப் பார்த்தால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

ஆண்டவர் முதன் முறையாகச் சவுலுக்குத் தரிசனமானார். அவர்



நீதிமான்தான். நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவர். ஆனால் அவர் இன்னும் கர்த்தருடைய இரக்கத்தைப் பெறவில்லை. ஆண்டவர் சந்தித்தப் பின் சவுலுக்கு 3 நாட்கள் கண்கள் தெரியவில்லை. கண்களிலிருந்த செதில்கள் விழுந்த பின்புதான் அவர் பார்வையடைந்தார்.

புதிய ஏற்பாட்டில் பிதா வரவில்லை. குமாரன்தான் வெளிப்பட்டார். குமாரன் வெளிப்படும்போதே கண்களில் பாதிப்பு உண்டானது.

கர்த்தர் யார் என்று ஏலியின் குமாரர்கள் அறியாதிருந்தார்கள். 'யாக்கோபு' ஆபிரகாமின் பேரன்தான். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன் என்று அவர் சொன்னாலும்கூட ஏறுகிற, இறங்குகிற தூதர்களுக்கு மேலாகக் கர்த்தர் நின்றார். ஏணி பூமிக்கும் வானத்திற்கும் மத்தியிலே வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் வானத்திலே நிற்கிறார். யாக்கோபு பூமியிலே படுத்திருக்கிறார்.

"தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியில் இருக்கிறாய். உன்னுடைய வார்த்தைகள் அவருக்கு முன்பதாகச் சுருக்கமாயிருப்பதாக (பிரசங்கி 5:2)." "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1தெச. 5:17) என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் சரியான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜெபிக்க வேண்டும்.

சரியான விதத்தில் தேவனுக்கு மகிமையைச் செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்!

சரியான விதத்திலே அவருக்குத் துதி, கன, மகிமையைச் செலுத்தி ஜெபம் பண்ணுங்கள்.

''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் ஸ்தோத்திரத்தோடு கூடிய விண்ணப்பத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."(பிலிப்பியர் 4:6) நீங்கள் ஸ்தோத்திரம் செலுத்துவதால் உங்களுக்கு அறியாமல் நீங்கள் தவறு செய்திருந்தாலும் கர்த்தர் பொறுப்பார்.

நாம் நன்றி சொன்னால் போதுமானது. ஆனால் நாம் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டுமென்றால் ''நாம் அறியாமல் அவருடைய உள்ளத்தை உடைத்தப் பகுதியைத்

தாண்டுவதற்கு ஸ்தோத்திரம் பயன்படுகிறது".

யோபு, "என்னுடைய பிள்ளைகள் உள்ளத்தில் தூஷித்திருப்பார்கள்" என்று



சொல்லிப் பலியிடுகிறார் அல்லவா! அதுதான் நாம் பண்ணும் ஸ்தோத்திரபலி. அறியாமல் நடந்த குறைகளையும் ஸ்தோத்திரபலி தாண்டிவிடும். "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங்கீதம் 50:23) என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

நாம் ஆண்டவருக்குக் காணிக்கைச் செலுத்துகிறோம். நம்முடைய உள்ளத்திற்கும், ஆவிக்கும் தெரிகிறது. கர்த்தர் பெரியவர். அவருக்குக் காணிக்கைச் செலுத்த வேண்டும் என்று ஆபேலும், காயீனும் காணிக்கைச் செலுத்தினார்கள். தேவன் எவ்வளவு பெரியவர், எவ்வளவு உயர்ந்தவர் என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்தச் சிறு சம்பவம் போதாதா?

''யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாயிருந்தான்.'' (ஆதி.25:27) அப்படியிருந்தும் அவர் வானத்தில் நின்றுதான் யாக்கோபுக்குச் சொப்பனத்தில் பேசினார். அவருடைய மகிமை பெரியது. அவரிடத்தில் நீங்கள் ஒரு பொருத்தனைப்பண்ணினால் அவர் உங்களிடம் அதைக் கேட்பார். நீங்கள் கொடுக்கவில்லையென்றால் அவரே எடுப்பார். யாக்கோபு அவராகத்தான் பொருத்தனைப் பண்ணினார்.

பொருத்தனைப்பண்ணி உங்கள் தேவனாகிய கர்த்தருக்குச் செலுத்துங்கள் என்று எழுதியிருந்தாலும், பொருத்தனைப்பண்ணி நிறைவேற்ற முடியாமல் இருந்தால் ஒருசில எல்லைகளைத் தாண்ட முடியாது. "என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்''(சங். 18:29). ஒருசில நேரங்களில் மதிலைத் தாண்ட வேண்டியது உள்ளது. அந்த எல்லைக்குச் சில நேரங்களில் பொருத்தனைப்பண்ணி தான் தாண்ட வேண்டியதிருக்கிறது. நீங்கள் பொருத்தனைப் பண்ணுவது, வானத்தையும், பூமியையும் படைத்தக் கர்த்தரிடத்தில் என்பதை மறந்து விடக்கூடாது. அதை விளையாட்டாக எண்ணக்கூடாது. அவரை ''அப்பா பிதாவே!" என்று அழைத்தாலும், "அவர் யார்'' என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாக இருக்கிறேன் என்றார். ஒரு நபர் பூரணப்பட்ட பின்புதான், அவருடைய தேவன் என்று தன்னை

அழைக்கிறார். ஆபிரகாமுக்குத் தேவன் சர்வ வல்லமையுள்ளவராக வெளிப்பட்டார். யாக்கோபிடம் வந்தபொழுது, நான் ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன் என்கிறார்.

எலியா கடந்து செல்லுகிற நாட்கள் வந்தபொழுது, "எலியாவின் தேவன்" என்று அழைக்கப்பட்டார். அந்த அளவுக்கு நீங்கள் கர்த்தரோடுகூட இசைந்து ஓட வேண்டும்.

ஆண்டவருக்கு நாம் பயந்து வாழ வேண்டும். அதற்குத் தடையாக உங்கள் நண்பர்கள் இருக்கக்கூடாது. உங்கள் phone இருக்கக்கூடாது. வேறு அசுத்த டிவி நிகழ்ச்சிகள் இருக்கக்கூடாது. வேறு எந்தக் காரியமும் இருக்கக்கூடாது. "கர்த்தர் போதும்" என்கிற வாழ்க்கை நமக்கு வேண்டும். நித்தியத்தில் எக்காலத்திலும் நாம் அவருடன் இருக்க வேண்டும் என்பதற்காக நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

தேவனிடத்தில் வார்த்தைகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல்!

"உங்கள் வார்த்தைகள் சுருக்கமாய் இருப்பதாக" என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியென்றால் உங்கள் வார்த்தைகள் தெளிவானதாகவும் செவ்வையானதாகவும் இருக்க வேண்டும். அதைத்தான் சுருக்கமாக இருப்பதாக என்று எழுதப்பட்டுள்ளது.

சில நேரங்களில் தவறான அறிக்கைகளைச் செய்துவிடுகிறீர்கள். "நீர் மாத்திரம் போதும், வேறு ஒன்றும் வேண்டாம், ஆண்டவரே!" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். அவர் உங்கள் வாழ்க்கையில் பெருகி நின்றால், உங்களுக்கு ஒருசில நேரங்களில் பொருளாதாரத் தேவை ஏற்படும்போது, மற்றவர்களை மாத்திரம் அதிகமாய் ஆசீர்வதிக்கிறீரே ஆண்டவரே, என்பீர்கள். ஆசாரியர்களுக்குக் கர்த்தர்தான் சுதந்தரம். அதைத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்று அவர் எண்ணுவார். ஆகவே வார்த்தைகளில் ஞானமாய் இருங்கள்.

கர்த்தாவே, "என்னை நீர் ஆசீர்வதியும். எனக்கு இந்த உலகத்திலே நீர் தருகிற ஆசீர்வாதங்களுக்கு மேலாக நீர்தான் எனக்கு முக்கியம்" என்பதையும் சொல்ல வேண்டும்.

கர்த்தர் யாக்கோபிடம், "நீ படுத்திருக்கிற பூமியை உனக்குக் கொடுப்பேன்" என்றார். அந்த இடத்தில் ஆண்டவரே நீர் போதும். மற்றவை வேண்டாம் என்று சொல்லக்கூடாது. ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது. எல்லாம் மாயை என்று எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு ஞானி அதன்பின்பு சொல்லுகிறார். எல்லாம் மாயை என்றால் வேலை செய்து சம்பாதிக்காமல், வீட்டில் படுத்து உறங்கி, பட்டினியாய் இருக்க வேண்டியதாகும். "வெளியிலே சிங்கம், வீதியிலே கொலையுண்பேன் என்று சோம்பேறி சொல்லுவான்" (நீதி. 22:13). அந்த நிலைக்கு நீங்கள் செல்லக்கூடாது. ஒவ்வொன்றிற்கும் மதிப்பு இருக்கிறது. சமைக்கக் காய்கறி வாங்குவதற்குப் பணம் தேவை. அடுத்தத் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை எடுத்து உங்கள்

கைகளில் சும்மா கொடுப்பார்களா? கோதுமையானாலும் நாம் பணம் கொடுத்து வாங்க வேண்டும். எல்லாம் உங்களுக்குத் தேவை. இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியது என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். சில நேரங்களில் உங்களுடைய தவறான அறிக்கைகள் அப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது. ஆகவேதான் "உங்கள் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" என்று ஆண்டவர் சொல்கிறார்.

ஆண்டவர், "ஜெபிப்பது எப்படி?" என்பதைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அதன்பின்பு "இடைவிடாமல் எப்படி ஜெபிக்க வேண்டும்?" என்பதையும் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

இவ்வளவு மகத்துவமுள்ள கர்த்தரை நீங்கள் உங்கள் பரமபிதாவாகக் கொண்டிருப்பதினால் ஜாக்கிரதையோடே நடந்து கொள்ளுங்கள்.

கர்த்தர் எவ்வளவு மகத்துவம் உள்ளவர் என்பதை அவர் நம்மில் வாசமாயிருப்பதைக் கொண்டு அறிய முடியும்.

ஒருநாள் நான் தேவசமுகத்திலே காத்திருக்கும்படியாக ஒரு ஹோட்டல் அறையிலே தங்கியிருந்தேன். நான் அதிக நேரங்கள் ஜெபித்துவிட்டு, கட்டிலில் படுத்தேன். இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவ வல்லமை என்னில் தங்கியிருப்பதை உணர்ந்தேன். என் இரண்டு கரங்களுக்குள் எப்படி மின்சார நிலையம் இருக்கிறதோ, அதைப்போல தேவவல்லமை புறப்படுவதற்கு ஆயத்தமாவதை, என் சரீரம் முழுவதிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட, மகிமை தங்கியிருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன்! நீங்கள் ஆராதிக்கும் தேவன் இன்னார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இயற்கைக்கு அப்பாற்பட்டவர் நம் கர்த்தர்! தாங்கமுடியாத அளவுக்கு மகத்துவம் உள்ளவர்!

உடன்படிக்கை பெட்டியும், தேவ ஜனங்களும்!

பரிசுத்த வேதத்தில் உள்ள 10 கட்டளைகள்தானே உடன்படிக்கைப் பெட்டியில் இருக்கிறது. அதன்பின்பு பொற்பாத்திரத்தில் அவர்கள் சாப்பிட்ட மன்னா இருந்தது. ஆரோனுடைய



துளிர்த்த கோல் அவ்வளவுதான்! கர்த்தருடைய பெட்டியைத் திறந்து பார்த்து ஐம்பதினாயிரம் பேர் செத்தார்கள். கர்த்தர் யார் என்று புரிந்து கொள்ளுங்கள்.

"ஜனங்களை நோக்கி: நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் அதைச் சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப்

பிரயாணப்பட்டு, அதற்குப் பின்செல்லுங்கள்.

உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்கவேண்டும்; நீங்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக; இதற்குமுன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை என்று சொல்லி கட்டளையிட்டார்கள்." – யோசுவா 3:3,4

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின்செல்லுங்கள் என்று சொல்லுகிறார். சிலர் கர்த்தர் சொல்லிக்



கொடுப்பதற்கு முந்தி ஓடுகிறவர்களாய் இருக்கிறார்கள். மிஞ்சின நீதிமான்களும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற பெருமையுள்ளவர்களுமாய் சிலர் இருக்கிறார்கள். நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு, அதற்குப்பின்செல்லுங்கள்.

"நீர் மரிக்கக்கூடாது" என்று பேதுரு இயேசுவுக்கு முன்நின்று சொன்னதுபோல சொல்லக்கூடாது. எனக்கு இடறலாக இருக்காதே. எனக்குப் பின்னாகப்போ சாத்தானே என்று சொன்னார். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு அதற்குப் பின் செல்லுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். பாடத்தை அப்படியே படிக்கிறவன் மதிப்பெண்கள் அதிகமாகப் பெறுகிறான். முதன்மையானவனாக வருகிறான். கைநிறைய சம்பளம் வாங்குகிறான். பாடத்தைச் சரியாகப் படிக்காதவன் பெயில் ஆகிறான். பின்பு தன்னுடன் படித்த மாணவனிடம் சென்று கைக்கட்டி வேலை செய்கிறான். கூலிக்காரனாக இருக்கிறான். இது எவ்வளவு வேதனையாக இருக்கும்!

வேதத்தின்படி நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள். நீங்கள் பின்செல்லுங்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே 2000 முழம் இருக்க வேண்டும். ஒரு முழம் என்றால் ஒன்றரை அடி. 2000 முழம் x 1.5அடி என்றால் 3000 அடி தூரம் தள்ளி, பின்பாக நடந்து செல்லுங்கள். கூடச் செல்லாதிருங்கள். கர்த்தர் எங்கே நிற்கிறார் என்று பார்த்துக் கொள்ளுங்கள். எங்க போகவேண்டும் என்கிற முகவரியைத் தெரிந்துகொள்ளுங்கள்.

''உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்கவேண்டும்; நீங்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக; இதற்குமுன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை என்று சொல்லி கட்டளையிட்டார்கள்." – யோசுவா 3:4

நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு சமீபமாய் வராதிருப்பீர்களாக. இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைக்குச் சொந்தக்காரர்களாக இருந்தபோதும் 2000 முழம் அதாவது 3000 அடி தூரத்தில்தான் பின்பாக வரவேண்டும். இதுதான் கர்த்தர் யார் என்றும் அவருடைய பத்துக் கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளை உள்ளே வைத்திருந்தால் அதில் எவ்வளவு மகிமை தங்கியிருக்கிறது என்றும் வார்த்தையைக் குறித்து அறிந்துகொள்ளுங்கள்.

வேதத்திற்கு நாம் கொடுக்க வேண்டிய கனம்!

நான் பலமாய் ஊழியம் செய்வதற்கு முன்பு நான் ஒரு திருச்சபையில் அமர்ந்திருந்தேன். எனக்கு முன்பாக உள்ள மூன்றாவது வரிசையில் ஒரு சகோதரன் அமர்ந்திருந்தார். அவர் வேதத்தை சேருக்குக் கீழே தரையில் வைத்திருந்தார். கையில் வேதத்தை வைத்திருக்க அவருக்கு முடியவில்லை. அவர்கள் வீடுகளில் அடி விழும்போது, அவர்கள் நான் நன்றாகத்தானே இருந்தேன். சபைக்குச் செல்லுகிறேன் அல்லவா! கர்த்தர் ஏன் அடிவிழப் பண்ணுகிறார். ஏன் இவ்வளவு வேதனை! என்று பின்வாங்குகிறார்கள். இடறுகிறவன் எதிலும் இடறுவான். பிழைத்திருக்கிறவன் சகலத்தையும் தாங்கி நிலைத்திருப்பான்.



இடறல்கள் உலகத்திற்கு வராமல் இருப்பது கூடாத காரியம். ஆனால் எவன் மூலமாக இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! என்று ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு சொன்னார். ஆகவே வசனத்தைச சரியாக பயன்படுத்த தெரிந்துகொள்ளுங்கள்.

நம்முடைய படுக்கையைப் போடும்போதுகூட கால் பகுதிப் பக்கம் பைபிள் இருந்துவிடக்கூடாது என்கிற ஜாக்கிரதையான எண்ணம் உங்களுக்கு வேண்டும்.

உலகத்தில் மற்றவர்கள் நினைப்பதைப்போல் நரகம் கிடையாது. அக்கினிக்கடல் கிடையாது என்று பரியாசக்காரர்கள் தோன்றி, வேதத்தைப் புரட்டுவார்கள். அவர்களோடு சேராதிருங்கள்.

ஒவ்வொருவரும் செய்கிற பாவங்கள், தவறுகள் தீமையாக அவர்களுக்குள்தான் சுற்றிக் கொண்டு இருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்த காயீன் தவறைச் செய்து, அதிலே நிலைத்திருந்ததால் அந்தப் பொல்லாங்கு தம்பியைக் கொல்லச் சென்றது. யாரும் தீமையை உற்பத்திச் செய்யக்கூடாது. தீமை துன்மார்க்கனைக் கொல்லும். மரணத்திற்கும் பாதாளத்திற்கும் பயப்படுகிற நீங்கள் உற்பத்தி பண்ணுகிற தீமைக்கும் பயப்படுங்கள். தீமையை உங்களுக்குள் சேர்த்து வைக்காதிருங்கள்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதி.28:13) அந்தத் தீமை உங்களைவிட்டு முற்றிலும் நீங்கும்படி, கசப்பான பாவக்கட்டு உங்களுக்குள்ளே இருக்காதபடி, எல்லாம் அறுந்து சமாதானமாய் வாழக் கர்த்தரைத் தேடி, ஓடி வாருங்கள். உங்களுக்கும் உடன்படிக்கைப் பெட்டிக்கும் 2000 முழத் தூரம் இருக்க வேண்டும்.

இவையெல்லாம் ஆட்டுக்குட்டியானவர் இரத்தம் சிந்தும் வரைக்குத்தான் இவ்வளவு தூரம் நிற்க வேண்டியது இருந்தது.

கிறிஸ்து பூமிக்கு வந்த பின் தேவன் மனுமக்களுடன் சமீபித்தல்!

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தர் அருகில் வந்து பேசுவதைப் பார்க்க முடியும்.

தேவரீர் ஆயத்தம் பண்ணிய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது. தேவனைப் பார்க்க முடியாது என்று சொல்லுகிற ஒரு கூட்டம் இருக்கும்.

"என்னைக் கண்டவன், பிதாவைக் காண்கிறான்" என்று இயேசு சொன்னார். ஏற்கனவே நீங்கள் தேவனைக் கண்டு விட்டீர்கள். நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்றார்.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே, ஒருசில கருகலாக எழுதப்பட்டுள்ள வசனங்களைப் புரிந்து கொள்ளுவதற்கு தேவனிடத்தில் ஞானத்தைக் கேளுங்கள். வேதப்புரட்டர்கள்தான் வசனத்தைப் புரட்டுவார்கள். அவர்களுக்கு வேதஅறிவு இருக்கும். ஆனால் மனந்திரும்புதல் இருக்காது.

அறிவு இறுமாப்பை உண்டு பண்ணும். பெருமையுள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிரி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் எவனோ அவன் உயர்த்தப்படுவான். தேவனுக்கு முன்பதாகத் தன்னை தாழ்த்திய மனாசேயைப்போல உங்களைத் தாழ்த்துங்கள்.

இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினாலே எங்கே



கூடியிருக்கிறீர்களோ, அவர்கள் மத்தியில் இருக்கிறேன் என்றார். நீங்கள், உங்கள் கணவர், உங்கள் பிள்ளை மூவரும் முழங்காற்படியிட்டு, கைகளைக் கோர்த்துக் குடும்ப ஜெபம்பண்ணுங்கள். அவர் உங்கள் மத்தியில்தானே இருக்க முடியும்.

துன்மார்க்கருடைய நினைவுகளை அவர் தூரத்திலிருந்து அறிகிறார். அருகில் செல்ல முடியவில்லை. அவ்வளவு அருவருப்பாக இருக்கிறது. அதே நேரத்திலே நீதிமான்களையோ கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளைக் கர்த்தர்

காப்பாற்றுகிறார். கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்.

நீங்கள் இயேசுவின் நாமத்தினாலே எங்கே இரண்டுபேர் மூன்றுபேர் எனக் கூடியிருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே அவர் இருக்கிறார். உங்கள் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டால் நீங்கள் அவரைப் பார்க்கலாம். இல்லாவிட்டால் அவர் இருப்பதை விசுவாசித்து நடக்கலாம்.

தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கலாம் என்றால், நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும், தரிசித்து தரிசித்து, பதில் கிடைத்து, முன்னே போக வேண்டும் என்பதல்ல. விசுவாசத்தில் நீங்கள் அடியெடுத்து வைக்கலாம். "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என்ற வார்த்தையின்படி உங்கள் காரியங்களை அவர் வாய்க்கப்பண்ணுவார். இது குமாரனைப்பற்றியது.

பிதாவும், குமாரனும் நமக்குள் வாசம் பண்ணுதல்!

ஒருவன் என் வசனத்தைக் கைக்கொண்டால், நானும் பிதாவும் அவரிடத்தில் வந்து, அவனோடே வாசம் பண்ணுவோம். இதில் பிதாவும் வந்து கூட இருக்கிறார் (யோவான் 14:23).

உடன்படிக்கைப் பெட்டியின் அருகில் வராதிருங்கள். 3000 அடித் தள்ளி வாருங்கள் என்றவர், வசனத்தைக் கைக்கொண்டு நடந்தால் பிதாவும் இருக்கிறார். குமாரனும் இருக்கிறார். ஆவியானவர் இறங்கித் தங்கியிருக்கிறார். இதற்கு மேலான என்ன வாழ்க்கை இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்!

2000 ஆண்டுகளுக்கு முன்பு மரியாளும், யோசேப்பும் எவ்வளவு பாக்கியம் பெற்றார்களோ அதைப்போல ஒரு பாக்கியம் இயேசு ராஜாவை நம் அருகில் பெற்றிருப்பதுதான்! நீங்கள் இந்தப் பாக்கியத்தை என்றைக்கும் உடையவர்களாக இருக்கலாம்.

நீங்கள் வசனத்தின்படி நடங்கள். வசனத்திற்குக் கீழ்ப்படிதல் மிகவும் அவசியம்! வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்கு ஆண்டவரால் நன்மை செய்ய முடியும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து இறங்குவது மாத்திரமல்ல, அவரால் நீங்கள் முழுவதுமாய் நிரப்பப்பட வேண்டும். தினந்தோறும் நீங்கள் ஆவியானவரின் மகத்துவத்தாலும், மகிமையினாலும் அதிகஅதிகமாய் நிரப்பப்பட வேண்டும். அதிக மகிமையோடு ஆவியானவர் உங்களில் தங்கியிருக்கும் போது உங்கள் வாழ்க்கை மலரக்கூடும்.

ஆவியானவர் இறங்கும்மட்டும் வனாந்தரம் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் இறங்கும்போதுதான் வனாந்தரம் வயல்வெளியாக மாறும்! கர்த்தரை இவ்வளவு சமீபமாய்ப் பெற்ற எந்த ஜாதியும், ஜனமும் அல்ல. நாம் பெற்றிருக்கிறோம். ஆமென்! ■

நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

கிட்னியிலிருந்த கல் மறைந்தது & கணவருக்கு 30 வருட குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை!



எனக்குச் சிறுநீரகத்தில் 3 கற்கள் இருந்தன. அந்தக் கற்கள் பெரிய அளவில் இருந்ததால் ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று மருத்துவர் சொன்னார். கடந்த மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். இயேசப்பா, "இந்தக் கற்கள் மறைந்துபோனால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று ஜெபித்தேன். அதே போல் ஆப்ரேஷன் இல்லாமல் சிறுநீரகத்திலிருந்த கற்கள் மறையக் கர்த்தர் கிருபை செய்தார். மேலும், என் கணவர் 30 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். இதனால் வீட்டில் சமாதானம் இல்லாமல் மிகவும் அவதிப்பட்டேன். கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். இயேசப்பா, "என் கணவருக்குக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கிடைத்தால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று பொருத்தனைப் பண்ணி ஜெபித்தேன். இந்த ஒரு மாத காலமாக என்னுடைய கணவர் குடிப்பதே இல்லை. இப்பொழுது எங்கள் வீட்டில் சமாதானம் நிலவுகிறது. கர்த்தர் என் கணவருக்கு குடிப்பழக்கத்திலிருந்து பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோதரி ஜான் டோரா, திருவள்ளூர்.

12 வருட வீசிங் பிரச்சனை சுகமானது!



நான் பார்வையற்றவன். எனக்கு 12 வருடங்களாக வீசிங் பிரச்சனை இருந்தது. எல்லா மழை காலத்திலும், வெயில் காலத்திலும் நான் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். நரம்பு ஊசி போட்டு 3 நாட்கள் நன்றாக இருக்கும். மறுபடியும் வீசிங் பிரச்சனை வந்துவிடும். நான் கடந்த 4 மாதங்களாக உபவாசக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெப எண்ணெயை வாங்கிக் கொண்டு சென்றேன். தினமும் ஜெபித்து ஜெப எண்ணெயைப் பூசினேன். 12 வருடங்களாக இருந்த பிரச்சனை இப்பொழுது இல்லை. மருந்து மாத்திரை எதுவும் எடுக்காமல் கர்த்தரே பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோ. சிவமணி, மதுரவாயல்.

மகனுக்கு 3 வருட குடிப் பழக்கத்திலிருந்து விடுதலை!



என்னுடைய மூத்த மகன் வேலை செய்யும் இடத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டான். 3 வருடங்களாகக் குடித்துக் கொண்டே இருந்தான். நிறைய நாட்கள் சாப்பிடாமல் அழுது கொண்டேயிருந்தேன். நான் தற்கொலை செய்து கொள்ளலாம் என்றெல்லாம் எண்ணினேன். நான் ஜெப உதவிக்குத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். அங்குள்ள சகோதரிகளும் எனக்கு ஆறுதலாகப் பேசினார்கள். "கர்த்தர்உங்கள் மகனுக்குக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை தருவார்" என்று சொல்லி ஜெபித்தார்கள். இந்த வருடம் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை அவன் குடிக்கவே இல்லை. கர்த்தர் என்னுடைய மகனுக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. – சகோதரி காஞ்சனா, அரக்கோணம்.

மகளுக்கு 13 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம்!



என் மகளுக்கு 13 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. நான் ஆசீர்வாதம் டிவியின் ஜெப உதவியைத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். ஒவ்வொரு நாளும் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்து ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். 13 வருடங்கழித்து கர்த்தர் அழகான பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

12 வருடக் கட்டி சுகமானது & மூட்டுத் தேய்மானம் சுகமானது!



நாங்கள் பார்வையற்றவர்கள். நாங்கள் ஆசீர்வாதம் டிவி மூலமாக இரட்சிக்கப்பட்டோம். மாதந்தோறும் நடக்கும் உபவாசக் கூட்டத்தில் வந்து கலந்து கொள்வோம். சகோதரன் மற்றும் சகோதரியின் செய்தியின் மூலமாக நாங்கள் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம். எனக்கு 12 வருடங்களாக மார்பகத்தில் கட்டி இருந்தது. உபவாசக் கூட்டத்தில் கொடுத்த ஜெப எண்ணெயைப் பூசி ஜெபித்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் என்னுடைய கணவர் 8 மாதங்களாக மூட்டுத் தேய்மானத்தினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். "அவர் நடக்கவோ, படி ஏறி இறங்கவோ கூடாது" என்றும், மூட்டு வலி மறுபடியும் வந்தால் ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். நாங்கள் மாதந்தோறும் உபவாசக் கூட்டத்திற்கு வந்து ஜெபித்து ஜெப எண்ணெயை வாங்கித் தினமும் பூசினோம். இப்பொழுது வலி எதுவும் இல்லை. இப்பொழுது வரை மருந்து மாத்திரை எதுவும் எடுக்கவேயில்லை. நாங்கள் வியாபாரம் செய்யக் கர்த்தர் கிருபை செய்தார். எங்களால் பார்க்க முடியவில்லை என்றாலும் ஆசீர்வாதம் டிவியின் மூலம் வருகிற தேவசெய்திகளைக் காதினால் கேட்டு அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.- சகோதரி சுமித்ரா, கண்ணகி நகர்.

புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலை!



நான் 12 வயதிலிருந்து புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தேன். நான் மனதளவில் புகைப்பிடிக்கிறதை விடவேண்டும் என்று நினைப்பேன். ஆனால் என்னால் விட முடியவில்லை. 17.02.2020 அன்று ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் சொன்ன வார்த்தையின் மூலம் எனக்கு விடுதலை கிடைத்தது. இப்பொழுது புகைப்பிடிப்பதே இல்லை. கர்த்தர் இந்த 5 வருடங்களாக எந்தவொரு கெட்ட பழக்கமும் இல்லாமல் என்னை வழி நடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோ. பேராச்சி, திருநெல்வேலி.

7 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம்!



எங்களுக்குத் திருமணமாகி 7 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். சகோதரி ஜெபிக்கும்போது குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்தார்கள். கர்த்தர் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். இப்பொழுது என் குழந்தையோடு வந்திருக்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கோமதி, கண்ணதாசன் நகர்.

அற்புதமாக Clipபை வெளியே வரச் செய்தார்!



என்னுடைய மகள் பள்ளிக்கூடத்தில் திடீரென்று தலையில் இருக்கும் clipபை விழுங்கி விட்டாள் என்று போன் வந்தது. அது பெரிய கிளிப்பாக இருந்ததால் அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். மருத்துவமனைக்குச் சென்று பார்த்தும் எந்த பயனுமில்லை. அந்தக் கிளிப்பில் Screws இருப்பதால் வயிற்றைக் கிழித்து விடுமோ என்று பயந்தேன். வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்த ஜெப எண்ணெயைப் பயன்படுத்தி ஜெபித்தேன். கடந்த மாதம் சனிக்கிழமை நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதில் சகோதரி, "ஜெப எண்ணெய்ப்பூசி ஜெபம் பண்ணுங்கள். சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனைப்பண்ணி ஜெபியுங்கள்" என்று சொன்னார்கள். மேலும், சகோதரன் ஜெபிக்கும்போது நானும் சேர்ந்து ஜெபித்து, ஜெப எண்ணெயைப் பயன்படுத்தி இயேசப்பா, "என் மகளுக்கு clip வெளியே வந்தால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். கூட்டம் முடிந்து வீட்டிற்குச் சென்றவுடன் மதியம் 3.30 மணிக்கு clip வெளியே வந்தது. கர்த்தர் பெரிய அற்புதத்தைச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி பாத்திமா, சென்னை.

2 வருட மரணப்படுக்கையை மாற்றினார் & சொந்த வீடு கொடுத்தார்!



நான் 2 வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் மரணப்படுக்கையில் இருந்தேன். கை, கால் செத்துப்போய் இருப்பதுபோல உணர்ந்தேன். என்னால் சிறிய வேலை கூடச் செய்ய முடியவில்லை. நான் இறந்து போய்விடுவேன் என்று கவலையாக இருந்தேன். மருத்துவமனைக்குச் சென்று பார்த்தும் சரியாகவில்லை. ஆசீர்வாதம் டிவியைப் பார்க்கச் சொல்லி, உள்மனதில் தோன்றியது. ஆசீர்வாதம் டிவியைப் போட்டேன். சகோதரன் அவர்கள் செய்தி வேளையில், "கை, கால் செத்துப்போனது போல் உணருகிறீர்கள். கர்த்தர் இப்பொழுது சுகம் கொடுக்கிறார். நீங்கள் முன்பு இருந்ததை விட நன்றாக இருப்பீர்கள்" என்று சொன்னார்கள். அந்த நேரமே நான் விசுவாசத்தோடு அழுது ஜெபித்தேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது நான் எல்லா வேலைகளையும் செய்கிறேன். மேலும் கொரோனா காலக்கட்டத்தில் லோன் மூலமாக வீடு வாங்க நினைத்தோம். ஆனால் கொரோனா காலக்கட்டத்தில் லோன் கட்ட முடியுமா என்று நினைத்தோம். என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் இருந்தோம். அந்த நேரத்தில் இயேசப்பா, "நீங்கள்தான் நல்ல வழியைக் காட்டுங்கள் என்று கர்த்தரிடத்தில் ஒப்படைத்து ஆசீர்வாதம் டிவிக்கு ஜெபவிண்ணப்பம் எழுதி, 1000 ரூபாய் காணிக்கையையும் அனுப்பி வைத்தேன். பிறகு நாங்கள் ஒரு இடத்தை வாங்கினோம். 7 மாதத்திற்குள் 8 லட்ச ரூபாய் மதிப்புள்ள வீட்டை, லோன் இல்லாமல் கட்டக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி தமிழ்ச்செல்வி, மதுரை.

4 மாத அரிப்பு வியாதி சுகமானது!



எனக்கு 4 மாதங்களாகச் சரீரம் முழுவதும் அரிப்பாக இருந்தது. இரவு முழுவதும் தூக்கமே இல்லாமல் இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தும் பயனில்லை. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் எனக்குப் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இப்பொழுது அரிப்பு எதுவும் இல்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

சர்ப்பத்தின் ஆவியிலிருந்து விடுதலை!



எனக்கு அநேக வருடங்களாகச் சர்ப்பத்தின் போராட்டம் அதிகமாக இருந்தது. தூங்கும்போது கனவில் வரும். என்னால் தூங்கவே முடியாது. நான் மிகவும் கஷ்டப்பட்டேன். கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும் போது, "சர்ப்பத்தின் ஆவி வெளியேறுகிறது" என்று சொன்னார்கள். அந்த நிமிடமே என்னை விட்டுச் சர்ப்பத்தின்ஆவி விலகிப்போனதை உணர்ந்தேன். கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது நான் நன்றாகத் தூங்குகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

குழந்தையின் யூரின் பிரச்சனை சரியானது!



என்னுடைய சகோதரி கர்ப்பந்தரித்து 4 மாதத்தில் கரு கலைந்து விட்டது. மறுபடியும் 6 மாதம் கழித்துக் கர்ப்பந்தரித்து, அழகானப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்ததிலிருந்து மூன்றரை வருடங்களாக யூரின் போய்க் கொண்டேயிருந்தது. "குழந்தைக்கு நீர்ச்சத்து இல்லை. யூரின் பை வீக்கமாக இருக்கிறது என்று டாக்டர்கள் சொன்னார்கள். காலம் முழுவதும் யூரின் டியூப் தான் போட வேண்டும்" என்று சொன்னார்கள். நான் கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து ஜெபித்தேன். "குழந்தை யூரின் பிரச்சனை சரியானால் சாட்சி சொல்லுவேன்" என்று பொருத்தனைப் பண்ணி ஜெபித்தேன். நேற்றைய தினத்தில் என்னுடைய சகோதரி போன் பண்ணி யூரின் 1 மணி நேரத்திற்கு ஒரு முறைதான் நார்மலாகப் போகிறது என்று சொன்னார்கள். கர்த்தர் பெரிய அற்புதத்தைச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி சத்தியா, வள்ளுவர்கோட்டம்.

வேலை கிடைத்தது!



நான் கடந்த 2 மாதங்களாக வேலை செய்யும் இடத்தில் client இல்லாததால் வேலை இல்லாமல் இருந்தது. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். "எனக்கு வேலை கிடைத்தால் அடுத்த மாதம் உபவாசக் கூட்டத்திற்கு வந்து சாட்சி சொல்லுவேன்" என்று ஜெபித்துச் சென்றேன். அதன்படி கர்த்தர் நல்ல வேலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி நான்சி, குமணசாவடி.

அம்மாவிற்கு அரிப்பு வியாதி நீங்கியது, சொந்த வீடு கொடுத்தார் & மாந்திரீகப் போராட்டத்திலிருந்து விடுதலை!



என் அம்மாவிற்குக் கடந்த 3 மாதங்களாகச் சரீரம் முழுவதும் அரிப்பு இருந்தது. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபவேளையில், "சரீரம் முழுவதும் உள்ள சிரங்கு மற்றும் அரிப்பு நீங்குகிறது" என்று சொன்னார்கள். அப்பொழுதே என்னுடைய அம்மாவிற்கு அரிப்பு நீங்கியது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். மேலும் நான் வாடகை வீட்டில் இருந்தேன். வீட்டைக் காலி செய்யச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். நான் தங்குவதற்கு வீடு இல்லாமல் இருந்தேன். உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது, "வீடு இல்லாதவர்கள் வீடு வாங்குவார்கள் அல்லது வீடு கட்டுவார்கள்" என்று சொன்னார்கள். சகோதரன் சொன்னபடியே, கர்த்தர் எனக்கு இரண்டு வீடு கொடுத்து ஆசீர்வதித்தார். நான் மாந்திரீகப் போராட்டத்தினால் மிகவும் கஷ்டப்பட்டேன். வீட்டில் ஒரு வேலையும் செய்ய முடியாமல் இருந்தது. எல்லா நேரமும் ஹோட்டலில் தான் வாங்கிச் சாப்பிட்டோம். நான் மிகவும் மனப்பாரத்தோடும், மனக் குழப்பத்தோடும் இருக்கும்படி மாந்திரீகம் வைத்திருந்தார்கள். உபவாசக் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது, "உங்களுடைய மனப்பாரத்தையும் குழப்பத்தையும் கர்த்தர் இன்றைக்கே நீக்கி விடுதலையைக் கொடுப்பார்" என்று சொன்னார்கள். அந்த நேரமே என்னுடைய மனபாரம் மற்றும் குழப்பம் நீங்கியதை உணர்ந்தேன். கர்த்தர் அந்த மாந்திரீகப் போராட்டத்திலிருந்து பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது என்னுடைய எல்லா வேலைகளையும் நானே செய்யக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி சந்தியா,
புரசைவாக்கம்

.

ஊழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!



GLORY TO GOD!

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

சென்னை உபவாசக் கூட்டம் 28.3.2026



ஒவ்வொரு மாதமும்
சென்னையில் நடைபெறுகிற
ஆசீர்வாதம் டிவியின்
உபவாசக் கூட்டத்தில்
திரளான ஜனங்கள்
கலந்து கொண்டு, ஆவி, ஆத்துமா,
சரீரத்தில் விடுதலையையும்
ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

கூட்டத்தில் வெளியே அமர்ந்திருந்த தேவப்பிள்ளைகள்

GLORY TO GOD!

சகோதரி கர்ப்பந்தரிக்கக் கர்த்தர் கிருபை செய்தார் & வேலையில் உயர்வைக் கட்டளையிட்டார்!



என்னுடைய சகோதரிக்குத் திருமணமாகி ஒன்றரை வருடங்களாகக் குழந்தைபாக்கியம் இல்லை. கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்துச் சென்றேன். இந்த மாதம் என்னுடைய சகோதரி கர்ப்பந்தரிக்க கர்த்தர் கிருபை செய்தார். மேலும் நான் வேலைபார்க்கும் ஸ்தலத்தில் எனக்கு வேலையில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது. எனக்கு அடுத்து வந்த எல்லாரும் வேலையில் முன்னேறிக் கொண்டேயிருந்தார்கள். கடந்த மாதம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நான் வேலையில் முன்னேற வேண்டும் என்று ஜெபித்துச் சென்றேன். அதன்படி கர்த்தர் என் வேலையில் உயர்வைக் கட்டளையிட்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி காருண்யா, சூலக்கரை.

பணி மாறுதல் கிடைத்தது!



நான் முன்பு சினிமா பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஆசீர்வாதம் டிவியைப் பார்க்க ஆரம்பித்ததிலிருந்து ஆசீர்வாதம் டிவியை மட்டும்தான் பார்ப்பேன். இப்பொழுது சினிமா பார்ப்பதிலிருந்து கர்த்தர் விடுதலையைக் கொடுத்தார். நான் அரசு மருத்துவமனையில் நர்ஸாக வேலை பார்க்கிறேன். எனக்கு வேலையில் பணி மாற்றத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். 16 இடங்களில் காலி இடங்கள் இருந்தது. எனக்குச் சுலபமாகப் பணி மாற்றம் கிடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். பிறகு 2015ல் எனக்கு அந்த இடத்திலும் travel அதிகமாக இருந்ததால் திரும்பவும் பணிமாற்றத்திற்காக ஜெபித்தேன். எனக்கு phone orderல் பணிமாற்றம் கிடைத்ததாக என்னுடைய கம்பெனியிலிருந்து phone வந்தது. தேவன் ஜெபத்தைக் கேட்டு பணி மாறுதல் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!
– சகோதரி தெய்வநாயகி, விளாத்திகுளம்.

அம்மாவுக்குப் பிசாசுப் போராட்டத்திலிருந்து விடுதலை!



என்னுடைய அம்மா 3 மாதங்களாகப் பிசாசுப் போராட்டத்தினால் மிகவும் அவதிப்பட்டிருந்தார்கள். கடந்த மாதம் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். உள்ளே வரும்போது என் கையை உதறிப்போட்டு ஓடினார்கள். நான் கஷ்டப்பட்டு கூட்டத்திற்குள் அழைத்து வந்தேன். சகோதரன் ஜெப வேளையில், "பிசாசுப் போராட்டத்தினாலும் மந்திரக் கட்டுகளினாலும் போராடுகிறவர்களைக் கர்த்தர் இப்பொழுது சுகமாக்குகிறார்" என்று சொல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது நன்றாக நடக்கிறார்கள். எல்லா வேலையும் தானாகவே செய்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

Distinction வாங்க உதவி செய்தார்!



நான் கர்த்தருடைய கிருபையினால் பனிமலர் கல்லூரியில் MBBS 4வது வருடம் படிக்கிறேன். எங்கள் கல்லூரியில் தேர்வில் 75% மேல் எடுத்தால் Distinction மற்றும் 80% மேல் இருந்தால் Honest என்று சொல்லுவார்கள். நான் கடந்த வருடம் தேர்வில் முதல் பாடத்தில் 77.25% மற்றும் மற்ற பாடத்தில் 81.5% வாங்கக் கர்த்தர் கிருபை செய்தார். கடந்த வருட வாக்குத்தத்தம், "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவுகொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். இரட்டிப்பான நன்மையைத் தருவேன்" என்ற வசனத்தின் படி கர்த்தர் எனக்கு எட்டாத இரட்டிப்பான நன்மையைச் செய்தார். கடந்த வருடம் நடந்த வாலிபர் கூட்டத்திலும் "நீ வாலாகாமல் தலையாவாய்" என்ற வசனத்தை வைத்துப் பேசினார்கள். எனக்குச் சகோதரன் கொடுத்தத் தனிப்பட்ட வாக்குத்தத்த வசனமும் அதே வசனம்தான். ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் செய்தியிலும் அடிக்கடி "நீ முதலாவது வர வேண்டும்" என்று படிப்பைக் குறித்துப் பேசுவார்கள். அது என்னை மிகவும் ஊக்குவிக்கும் விதமாக இருக்கும். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ஹெலன் பிரான்சியா, அயனாவரம்.

பிள்ளைகளைக் கொடுத்தார் & சொந்த வீடு கொடுத்தார்!



ஒருநாள் சகோதரன் செய்தி வேளையில், தனக்கு ஆண்டவர் ஆண் பிள்ளையைக் கொடுத்ததைப் பற்றி சாட்சி சொன்னார்கள். அதைக் கேட்டு நானும் இயேசப்பா, "எனக்கொரு ஆண்குழந்தையைக் கொடுங்கள்" என்று விசுவாசத்தோடு ஜெபித்தேன். எனக்கு ஆண் குழந்தை பிறந்தால் 'ஹோரீஸ்' என்று பெயர் வைப்பேன் என்று சொல்லி ஜெபித்து, ஒரு நோட்டில் எழுதினேன். அந்த மாதத்திலே கர்த்தர் கர்ப்பந்தரிக்கக் கிருபை செய்தார். அதேபோல் ஆச்சரியமாக ஹோரீஸ் தம்பி பிறந்த அதே மார்ச் மாதம் 25 ஆம் தேதி எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. கர்த்தர் அடுத்து 2 பெண் குழந்தைகளையும் கொடுத்தார். என்னுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதம் டிவி மூலமாக அநேக நன்மைகளைப் பெற்றிருக்கிறேன். மேலும் நான் இரண்டு அறைகள் உள்ள வீட்டில் தான் இருந்தேன். இயேசப்பா, "எனக்கு ஜெப அறை மற்றும் அடுப்பறை உள்ள வீடு வேண்டும்" என்று ஜெபித்தேன். ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபவேளையில், "கர்த்தர் உங்களுக்கு அழகான வீட்டைக் கொடுப்பார். அதற்கு 'Blessing cottage' என்று பேரிடுங்கள்" என்று சொன்னார்கள். நானும் ஒவ்வொரு நாளும் இதைச் சொல்லியே ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். கர்த்தர் பெரிய வீட்டைக் கட்டிக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கேன்சர் இல்லை என்று ரிப்போர்ட் வந்தது!



என்னுடைய கணவருடைய தம்பிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது 80% கேன்சர் என்று சொன்னார்கள். நாங்கள் ஜெபித்துக் கொண்டேயிருந்தோம். உபவாசக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு நேற்றைய தினத்தில் ஜெப விண்ணப்பம் எழுதிக் கொண்டிருக்கும்போது 2மணி நேரத்திற்குள் ரிசல்ட் வந்தது. ரிசல்ட்டில் எல்லாம் நார்மல் என்று வந்தது. மருந்து மாத்திரை மூலம் சரிசெய்து விடலாம் என்று டாக்டர்கள் சொன்னார்கள். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

அதிசயமாக மகள் 10ஆம் வகுப்பில் 429 மதிப்பெண்கள் பெற கிருபை செய்தார்!



என்னுடைய மூத்த மகள் கடந்த வருடம் 10ஆம் வகுப்பு படித்தாள். எப்பொழுதும் அவள் 250/500 மதிப்பெண்கள்தான் எடுப்பாள். கடந்த வருடம் நடந்த உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். என்னுடைய மகள் 400க்கும் மேல் மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்று ஜெபித்துச் சென்றேன். அதன்படி பொதுத் தேர்வில் 429/500 மதிப்பெண்கள் எடுக்கக் கர்த்தர் கிருபை பாராட்டினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி கிரேஸ் வெங்கட், சிவகாசி.

பில்லிசூனியக் கட்டிலிருந்து விடுதலை!



நான் சில நாட்களாகப் பில்லிசூனியக் கட்டுகளினால் பாதிக்கப்பட்டிருந்தேன். அதனால் எனக்குத் தலை, கை மற்றும் கால் பகுதியில் மிகுந்த வலி இருந்தது. கடந்த வாரம் ஆசீர்வாதம் டிவியில் Live சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அப்பொழுது சாட்சிகளை, சகோதரன் சொல்லும்போது நானும் விசுவாசத்தோடு ஜெபித்தேன். அந்நேரமே பில்லிசூனியக் கட்டு கழன்று விழுந்தது. கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். மேலும் என்னுடைய மகள் பிறப்பதற்கு முன்பு நான் சென்னையில் நடக்கும் உபவாசக் கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டேன். கூட்டம் முடிவில் பலர், அவர்களுக்கு பல வருடங்களுக்குப் பிறகு குழந்தை பிறந்ததாகச் சாட்சி சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்துச் சென்றேன். கர்த்தர் எனக்கு அழகானப் பெண் குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி இளவரசி, கடையநல்லூர்.

நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் DTHல் (AIRTEL, SUN DIRECT) ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

"நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்." - ஏசாயா 32:20. "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." -2கொரி.9: 6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

துதியுங்கள்! ஜெபியுங்கள்!

அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் (2கொரிந்தியர் 1:11).

அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் (2கொரி. 4:15) என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.



வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை (சுமார் 600 கிளைத் திருச்சபைகள்) ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!



9952432020@tmb என்ற UPI ID

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay | PhonePe | paytm

9952432020 (Blessing TV)

9345678981 (Allen Paul)

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

www.blessingtv.tv/donation என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வங்கி மூலம்

ICICI	TMB
'BLESSING TV'	'BLESSING TV'
A/C No. : 6172 0103 4129	A/C No. : 0041 5031 0875 177
BRANCH : SIVAKASI	BRANCH : VIRUDHUNAGAR
IFS CODE - ICIC 000 6172	IFS CODE : TMBL 000 0004

மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.



JESUS LOVES
Blessing TV

வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.

முகவரி: பிளஸ்ஸிங் டி.வி., எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் - 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி, எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010, தமிழ்நாடு.

Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)



நோக்கிப்பார்த்துப் பிரகாசமடையுங்கள்!

"அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை." - சங்கீதம் 34:5

பிரியமானவர்களே, நாம் தேவனை நோக்கிப் பார்க்கும்போது, அவர் நம்முடைய முகங்களைப் பிரகாசமடையச் செய்கிறார். நம்முடைய வாழ்க்கையைப் பிரகாசமடையச் செய்கின்றார். அவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை.

இந்த வசனத்திலே எழுதப்பட்ட 'அவர்கள்' என்றால் ஆதியிலிருந்த பரிசுத்தவான்கள், தேவ மனிதர்கள் எப்பொழுதெல்லாம் தேவனை நோக்கிப் பார்த்தார்களோ, அப்பொழுதெல்லாம் கர்த்தர் அவர்களுக்குப் பதில்கொடுத்து, அவர்களை விடுவித்ததை நாம் வேதத்தில் பார்க்க முடிகிறது. ஒருவிசை வனாந்தரத்தில் தேவன் தமது ஜனங்களை அழைத்துக்கொண்டு வந்தபொழுது, இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்துக்கொண்டே வந்தார்கள். அப்பொழுது கொள்ளிவாய்ச் சர்ப்பங்களைத் தேவன் அனுப்பினார். முறுமுறுத்த அநேகரை அந்தச் சர்ப்பம் கடித்தது. அதினால் அநேகர் மரித்தார்கள் என்று பார்க்கின்றோம். அப்பொழுது மோசே தேவனை நோக்கிப் பார்த்தபொழுது, அவர், "ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தை வெண்கலத்தில் செய்து உயர்த்தி வை. யாரையெல்லாம் இந்தக் கொள்ளிவாய்ச் சர்ப்பம் கடிக்கிறதோ, அவர்கள் எல்லோரும் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும்போது, அவர்கள் எல்லாரும் பிழைத்துக் கொள்வார்கள்" என்று தேவன் சொன்னார். அந்த நாளில் பரிகாரமாக அப்படிச் சொன்னார். அப்படியே யாரையெல்லாம் சர்ப்பம் கடித்ததோ, அவர்கள் எல்லாரும் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து, பிழைத்துக் கொண்டார்கள் என்று பார்க்கிறோம் (எண். 21:9)



சகோதரி சோபியா ஆலன்பால்

இன்றைக்கும்கூட நாம் யாரை பார்க்கவேண்டும் என்றால் நமக்காக சிலுவையிலே உயர்த்தப்பட்ட இயேசுவைப் பார்க்க வேண்டும்.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்." - யோவான் 12:32

இயேசு மகாராஜா சிலுவையிலே நமக்காக உயர்த்தப்பட்டார். இஸ்ரவேல் தேசத்திலே சபிக்கப்பட்டவர்களைச் சிலுவை மரத்திலே அறைந்து தண்டனை நிறைவேற்றுவார்கள். நம்முடைய சாபங்கள், பாவங்கள், துக்கங்கள், வியாதிகள் எல்லாவற்றையும் அவர் சுமந்துகொண்டதினாலே எருசலேம் நகரத்திற்குப் புறம்பாகக் கொல்கொதா மலையிலே சிலுவை மரத்திலே அறைந்து அவரை உயர்த்தி வைத்தார்கள்.



சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்க்கும்பொழுதெல்லாம் நம் வாழ்க்கைப் பிரகாசமடையும்.

நெருக்கத்தில் நோக்கிப்பாருங்கள்!

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயாதிபதிகள் புத்தகத்தில் இஸ்ரவேல் மக்கள் ஒரு தலைமுறை தாண்டியவுடனே அடுத்த தலைமுறையினர் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். அதனால் கர்த்தர் அவர்களை மீதியானியர், அம்மோனியர், பெலிஸ்தியர் கையிலே ஒப்புக் கொடுக்கிறார். எதிரிகளால் இஸ்ரவேல் ஜனங்கள் நெருக்கப்படும் பொழுதெல்லாம் அவர்களுக்கு உணர்வு வரும். நாம் கர்த்தரை விட்டு தூரமாகப் போய்விட்டோமே. கர்த்தரைச் சேவிப்பதை விட்டுவிட்டு அந்நிய தெய்வத்தைப் பின்பற்றி விட்டோமே என எண்ணி, அவர்கள் நெருக்கப்படும் பொழுதெல்லாம் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். அப்பொழுதெல்லாம் ஆண்டவர் அவர்கள் செய்ததவற்றையெல்லாம் மன்னித்து, அவர்களை இரட்சிப்பதற்காக உடனே இறங்குவதை நாம் பார்க்க முடியும்.

மீதியானியர்களிடமிருந்து இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிக்கக் கர்த்தர் கிதியோனை எழுப்பினார். பெலிஸ்தர்களிடமிருந்து இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிக்கக் கர்த்தர் சிம்சோனை எழுப்பினார். அம்மோனியர்களிடமிருந்து இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிக்கக் கர்த்தர் யெப்தாவை எழுப்பினார் என்று பார்க்கின்றோம். இப்படி தேவஜனங்கள் தூரமே போனாலும் கூட நெருக்கப்படும்பொழுது, அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்த்தார்கள். கர்த்தர் அவர்களை விடுவித்தார்.

இதுபோல அடிக்கடி தேவப்பிள்ளைகள் தேவனை விட்டு தூரம் சென்று விடுகிறார்கள். எந்தப் பாடுகளும் இல்லை, எந்தப் பிரச்சனையும் இல்லை என்றால், உலகத்தோடு வாழ்ந்தால் தப்பே இல்லை என்று தங்கள் மனம்போன போக்கிலே வாழத் துவங்கிவிடுகிறார்கள். ஆனால் நெருக்கங்கள் சூழ்ந்துகொள்ளும்போது, கர்த்தரை நோக்கிப் பார்த்தால், நிச்சயமாகக் கர்த்தர் அவர்களை விடுவித்து அவர்களுடைய வாழ்க்கையைப் பிரகாசமடையச் செய்கின்றார்.

குறைவிலே நோக்கிப் பாருங்கள்!

ஈசாக்கு - ரெபெக்காள் வாழ்க்கையில் அவர்களுக்குத் திருமணமாகி 20 ஆண்டுகள் குழந்தையில்லாமல் இருந்தது. ஈசாக்கு தன் மனைவிக்காகத் தேவனை நோக்கி ஜெபம் செய்தார்.

''மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்."

- ஆதி. 25:21



ஈசாக்கு இவ்வாறு யோசித்திருக்கலாம். எனக்குத் திருமணமாகி 20 ஆண்டுகள்தான் ஆகிறது. என் அப்பாவுக்கு 100 வயதில்தான் நான் பிறந்தேன். ஆகவே நமக்கும்கூடத் தாமதமாகத்தான் குழந்தை பிறக்கும். இப்பொழுது ஜெபித்துப் பிரயோஜனமில்லை, எங்கள் குடும்பத்தில் இப்படித்தான் வழக்கம். இது ஒரு சாபம் என ஈசாக்கு எண்ணியிருக்கலாம் அல்லவா!

ஆனால் அவர் தன் மனைவிக்காகத் தேவனை நோக்கி ஜெபம்பண்ணினார். ஈசாக்கு கர்த்தரை நோக்கி, தன் மனைவிக்காக ஜெபித்தபொழுது, ஆண்டவர் அவருடைய வேண்டுதலைக் கேட்டு, ரெபெக்காள் கர்ப்பந்தரித்து, இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுக்கக் கர்த்தர் உதவி செய்தார்.

உங்கள் குடும்பத்திலும்கூட இப்படித்தான் சாபம் இருக்கும், போராட்டம் இருக்கும், எல்லாமே தாமதமாகும். இந்தவிதமான இச்சையின் ஆவி எங்கள் மூதாதையரின் குடும்பத்தில் போராடியது. அதே போராட்டம் எங்கள் குடும்பத்திற்கு வந்திருக்கிறது. எங்கள் முன்னோர்களின் வாழ்க்கையில் திருமணம் எல்லாம் தாமதமானது. அதே போராட்டம் எங்களுக்கும் வந்திருக்கிறது என்று எண்ணிக்கொண்டு நீங்கள் ஒருவேளை இருக்கலாம். அப்படி எண்ணாதபடிக்கு நீங்கள் தேவனை நோக்கிப் பார்த்தால், உங்கள் முன்னோர் வாழ்க்கையில் என்ன சாபம், போராட்டம் இருந்தாலும் கர்த்தர் அதைப் பார்ப்பதில்லை. கர்த்தர் உங்களைப் பார்க்கிறார்.

நீங்கள் அவரை நோக்கிப் பார்த்தவுடனே அவர் உங்கள் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார்.

வாழ்க்கையின் முடிவுபோல் இருந்தாலும் நோக்கிப்பாருங்கள்!

சிம்சோன் கழுதையின் தாடை எலும்பைப் பயன்படுத்தி 1000 பெலிஸ்தர்களைக் கொன்றுபோட்டார்.

"அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு; தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான்."
- நியாயாதி. 15:18



சிம்சோனைக் கர்த்தர் எழுப்பினார். தம்முடைய ஜனங்களுக்காக யுத்தம் பண்ணவைத்தார். 1000 பேரைக் கழுதைத் தாடை எலும்பினால் கொன்று போட்டார். பெரிய இரட்சிப்பை உண்டு பண்ணினார். ஆனால் அந்த நேரத்தில் சிம்சோனுக்குத் தாகம் வருகிறது.

"இவ்வளவு பெரிய இரட்சிப்பைத் தேவன் என் கையினால் உண்டாக்கியிருக்கிறார். எனக்குத் தண்ணீர் இல்லை. நான் சாகப் போகிறேனே" என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: "தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, நான் மடிந்து போக வேண்டுமா" என கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். அவன் மனம் உடைந்து போகவில்லை, மனம் வெறுத்துப் போகவில்லை.

"அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது;"
- நியாயாதி. 15:19

அருகில் தண்ணீரும் இல்லை. தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பதற்கு ஆட்களும் இல்லை. சாகப்போகிற சூழ்நிலை வருகிறது. அப்பொழுது தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். ஆண்டவர் ஒரு அற்புதத்தைச் செய்தார். பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார். அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது.

"அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது." - நியாயாதி. 15:19

இவ்வளவு பெரிய இரட்சிப்பை உண்டு பண்ணியிருக்கிறான். அவனுக்குத் தண்ணீர் தேவைப்படும் என்று ஆண்டவருக்குத் தெரியாதா? தாகத்தினால் சாக விட்டுவிடுவாரா தேவன்! ஆனாலும் முடிவு வரைக்கும் போகத்தக்கதான சூழ்நிலை வருகிறது.

இன்றைக்கும் தேவப் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய யுத்தங்களைச் செய்து, செய்து பல ஜெயத்தைப் பெற்றுக்கொண்டு நீங்கள் மேலே வந்துகொண்டு இருக்கலாம். ஆனாலும் சில வேளைகளில் யாருமே உதவி செய்ய முடியாத திக்கற்ற நிலை, முடிவை நோக்கிச் செல்லக்கூடிய வேதனை, நெருக்கம் வந்துவிடுகிறது.

சோர்விலே நோக்கிப் பாருங்கள்!



"அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி," - 1இராஜா. 19:4

எலியா ஒரு ஆவிக்குரிய தேவ மனிதர். அவர் தன்னுடைய கைகளினாலே பலத்த கிரியைகளைச் செய்தார். இக்கட்டான நேரத்திலே தேவனை நோக்கிப் பார்த்தபொழுது, பிரகாசிக்கச் செய்கிறார்.

தேவன் சிம்சோனைத் தாகத்தால் சாக விடவில்லை. அழகாய்ப் பள்ளத்தைப் பிளந்து, தண்ணீரைக் கொடுத்து, அவனைக் குடிக்கச்செய்து, அவன் உயிர் திரும்ப அவனுக்குள் வர உதவி செய்தார்.

நீங்கள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும்கூட நன்றாக ஜெபித்து, ஜெபித்து, துதித்து துதித்து ஓடிக்கொண்டிருக்கும்போதுகூட, சில வேளைகளில் இப்படிப்பட்ட வறட்சி, குடிப்பதற்குத் தண்ணீர்கூட இல்லாத ஒரு வறட்சி உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடலாம். அதனால் சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அவர் திரும்பவுமாக உங்களை ஆவியிலே உயிர்ப்பிப்பார்.

நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். ஏதாவது பிரச்சனை, போராட்டம் வந்தால் எங்கிருந்தாவது உதவி வருமா? மற்றவர்களிடம் தொலைபேசியில் பேசலாமா? ஆறுதலாக என்னிடம் பேசுவார்களா? எனக்கு மிகவும் கலக்கமாக இருக்கிறது. சமாதானமே இல்லை, என்னை நேசிக்கிறவர்களிடத்தில் பேசினால் எனக்குச் சமாதானம் வருமா என நீங்கள் யோசிக்கிறீர்களா?

நீங்கள் பிரச்சனையின் வழியாய், போராட்டத்தின் வழியாய் கடந்துசெல்லும் போது. கர்த்தரை நோக்கிப் பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு வெட்கம் வருவதேயில்லை. உங்களுக்குத் தோல்வி வருவதே கிடையாது.

நோக்கிப் பார்க்கக் கற்றுக் கொடுங்கள்!

நீங்கள் உங்கள் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். சிறிய பிள்ளைகளுக்கு நீங்கள் உதவி செய்யலாம். ஆனால் வளர்ந்த பிள்ளைகளுக்கு, அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டிய சூழ்நிலை வரும்போது, அவர்கள் உங்களையே சார்ந்துகொண்டு இருக்கலாம். அவர்களிடம், "நீ கர்த்தரை நோக்கிப் பார்" என்று கற்றுக்கொடுங்கள்.

பழைய ஏற்பாட்டில் வனாந்தரத்தில்

சொல்லப்பட்டது, யாரைச் சர்ப்பம் கடித்ததோ, அவர்கள்தான் நோக்கிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா என யார் வேண்டுமானாலும் நோக்கிப் பாருங்கள் என்று சொல்லப்படவில்லை. சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவன் எவனோ, அவன் நோக்கிப் பார்க்க வேண்டும்.

ஆகவே அவரவருடைய ஆத்துமாவுக்கு அவரவர்தான் பொறுப்பு. அவரவர் பிரச்சனையிலிருந்து வெளிவர அவரவர் ஜெபிக்க வேண்டும். மற்றவர்கள் ஒத்தாசை பண்ணலாம். ஜெபிக்கலாம். வழி சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் நோக்கிப் பார்க்க வேண்டும்.

ஒரு சிலர் பில்லி சூனியக்கட்டுகள், ஏவல்கள், போராட்டங்கள், மை, மாந்திரீகங்கள் என இவற்றிலிருந்து விடுதலை பெற முடியாமல் தவிக்கலாம். அப்பொழுது ஊழியர்களாகிய நாங்கள் உங்களுக்கு வழியைக் கற்றுக் கொடுக்கலாம். உங்களுக்காக நாங்கள் விண்ணப்பம் பண்ணுகிறோம். போராடி ஜெபிக்கிறோம். ஆனால் நீங்கள் நோக்கிப் பார்ப்பீர்களானால் தேவனிடத்திலிருந்து உங்களுக்கு நிச்சயமாக விடுதலை வரும்.

ஒரு வேடிக்கையான கதை இது! ஒரு காட்டுப் பகுதியிலே பள்ளத்திலே ஒரு ஆட்டுக்குட்டி விழுந்துவிட்டது. விழுந்த உடனே அது மிகவும் சோர்வடைந்து விட்டது. நம்மால் இந்தப் பள்ளத்திலிருந்து வெளியே வரவே முடியாது. நமக்குத் தண்ணீர் இல்லாமல், உணவு இல்லாமல் இந்தப் பள்ளத்திலேயே இருந்து செத்துவிடுவோம் என எண்ணி அந்தப் பள்ளத்திலேயே சுருண்டு படுத்துக் கொண்டதாம்.

வழியில் போய்க் கொண்டிருந்த மற்ற மிருகங்கள் எல்லாம், பாவம் ஏதோ, ஒரு ஆட்டுக்குட்டி பள்ளத்தில் தெரியாமல் விழுந்து செத்துப்போய்விட்டதுபோல என்று எண்ணி, அதை விட்டு விலகிச் சென்றன.

ஒருநேரம் வந்தபொழுது, அந்த ஆட்டுக்குட்டி நாம் ஏன் சுருண்டு படுத்திருக்க வேண்டும். யாராவது நமக்கு உதவி செய்வார்களா? நாம் மேலே நோக்கிப் பார்க்கலாம் என அண்ணார்ந்து, ஆட்டுக்குட்டி மேலே பார்த்துக் கொண்டு இருந்ததாம். அப்பொழுது அந்தப் பக்கம் ஒரு ஒட்டகச்சிவிங்கி வந்ததாம். அது பள்ளத்தைக் குனிந்து பார்த்தபொழுது, ஆட்டுக்குட்டி மேல் நோக்கிப் பார்த்து நின்றதைக் கண்டு, அதைத் தூக்கி அப்படியே வெளியே விட்டதாம்.

ஆம் பிரியமானவர்களே, நாம் துவண்டுபோய், கர்த்தரைத் தேடாமல் சோர்ந்துபோய், படுத்துக்கொள்ளும் போது நமக்கு ஒத்தாசை வருவதில்லை. நீங்கள் உங்களைப் பெலப்படுத்திக் கொண்டு, கர்த்தரை நோக்கிப் பாருங்கள். உங்களுக்கு வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும். ஆமென்!

■



தெரிந்து கொள்வோமா!

பூசணி விதைகளின் நன்மைகள்



இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்!

பூசணிக்காய் விதைகளில் உள்ள ஆரோக்கியமான கொழுப்புகள், ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மற்றும் மக்னீசியம் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முக்கிய அம்சங்கள்.

மக்னீசீயம்: இதயத் துடிப்பு சீராக இருக்கவும், இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள்: ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரஸைக் குறைத்து, இதய நோய் அபாயத்தைத் தடுக்கின்றன.

பைடோஸ்டெரால்கள்: கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவுகின்றன.

இரத்த சர்க்கரை அளவைச் சாதாரணமாக வைத்திருக்க உதவுகிறது

மக்னீசியம், நார்ச்சத்து மற்றும் புரதம் ஆகியவை சேர்ந்து, பூசணிக்காய் விதைகளை இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த சிறந்த உணவாக மாற்றுகின்றன. குறிப்பாக டயபட்டீஸ் (Diabetes) உள்ளவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆராய்ச்சிகள், மக்னீசியம் நிறைந்த உணவுகள் இன்சுலின் சென்சிட்டிவிட்டியை மேம்படுத்தி, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்

ஜிங்க் (Zinc) என்பது நோய் எதிர்ப்பு அமைப்பை வலுப்படுத்தும் முக்கிய கனிமம். பூசணிக்காய் விதைகள் ஜிங்கிள் சிறந்த ஆதாரமாக உள்ளன. தினசரி சிறிதளவு விதைகள் உட்கொள்வதன் மூலம் சளி, காய்ச்சல் போன்ற சிறிய நோய்கள் ஏற்படும் வாய்ப்பு குறையும்.

ஜிங்க், உடலின் நோய் எதிர்ப்பு செல்களின் வளர்ச்சிக்கும், புதிய திசுக்கள் உருவாகுவதற்கும் அவசியமானது. இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் இது ஒரு சிறந்த ஊட்டச்சத்து உணவாகும்.

தூக்கத்தின் தரத்தை மேம்படுத்தும் ட்ரிப்டோபேன்

பூசணிக்காய் விதைகள் இயற்கையாகவே ட்ரிப்டோபேன் (Tryptophan) எனப்படும் அமினோ அமிலத்தைக் கொண்டுள்ளன. இது உடலில் செரோட்டோனின் மற்றும் மெலட்டோனின் என்ற ஹார்மோன்களாக மாற்றப்பட்டு தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துகிறது. பூசணிக்காய் விதைகள் மற்றும் சிறிதளவு பழங்கள் சேர்த்து இரவில் சாப்பிட்டால், உடல் மெதுவாக அமைதியாகி, இயற்கையாக நல்ல தூக்கத்திற்கு வழிவகுக்கும். தூக்கமின்மை அல்லது சீரற்ற நேரம் உள்ளவர்களுக்கு இது ஒரு இயற்கையான தீர்வாக அமையும்.

எலும்புகளை வலுவாக வைத்திருக்கும்

எலும்பு வலிமைக்குக் கால்சியம் முக்கியமானது என்றாலும், மக்னீசியமும் அதே அளவில் அவசியம். பூசணிக்காய் விதைகள் மக்னீசியத்தின் சிறந்த ஆதாரமாக இருப்பதால், எலும்பு நோய்களைத் தடுக்க உதவுகின்றன.

மக்னீசியம், வைட்டமின் 'D' மற்றும் கால்சியத்துடன் இணைந்து செயல்பட்டு எலும்புகளை வலுப்படுத்துகிறது. வயதானவர்கள் மற்றும் பெண்களுக்கு இது சிறந்த இயற்கை ஊட்டச்சத்து.

மன ஆரோக்கியம்

பூசணிக்காய் விதைகளில் உள்ள மக்னீசியம் மற்றும் ட்ரிப்டோபேன் மன அழுத்தத்தைக் குறைத்து, மன அமைதியை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.மக்னீசியம் குறைவாக இருந்தால் மன அழுத்தம், கவலை, மனநிலை மாற்றங்கள் போன்ற பிரச்சனைகள் ஏற்படக்கூடும்.

பூசணிக்காய் விதைகளைத் தினசரி உணவில் சேர்த்தால், மனநிலை சீராகவும், அமைதியாகவும் இருக்கும். குறிப்பாக வேலை அழுத்தம் அதிகமாக இருப்பவர்களுக்கு இது ஒரு இயற்கையான மனநல உதவி ஆகும்.



செரிமானத்தை மேம்படுத்தும் நார்ச்சத்து

பூசணிக்காய் விதைகள் நார்ச்சத்து நிறைந்தவை. இது குடலின் செயல்பாட்டைச் சீராக்கி, மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது. செரிமான அமைப்பு சீராக இருக்கும்போது உடல் முழுவதும் சக்தி மற்றும் புத்துணர்வு ஏற்படும்.

பொதுவாக, உலர்த்திய விதைகளை நன்றாக மென்று சாப்பிடுவது, நார்ச்சத்து முழுமையாக உடலில் கலக்க உதவும். இது குடல் ஆரோக்கியத்தை நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கும்.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

அறிவியல் செய்திகள்!

AI தொழில்நுட்பம் (Artificial Intelligence) ரயிலில் யானைகள் அடிபடாமல் தடுக்கும் டிரோன்



கோவை வனக்கோட்டத்தில் AI தொழில்நுட்பத்தில் ஆளில்லா டிரோன் கேமரா மற்றும் கண்காணிப்பு டிரோன்களின் உதவியுடன் ரயில் வரும் போது யானைகள் ரயில் பாதை அருகிலேயே வராமல் துரத்தும் புதிய திட்டம் தற்போது துவக்கப்பட்டுள்ளது.

இந்த டிரோன்கள் 24 மணி நேரமும் 2 ரயில் பாதைகளை டிரோன் மூலமாகக் கண்காணித்து, ரயில் பாதைக்கு அருகில் வரும் யானைகளை சைரன் சத்தம் எழுப்பித் துரத்துவதை களஆய்வில் அறிய முடிந்தது.

அதன்படி தமிழ்நாடு – கேரளம் எல்லைப்பகுதிகளில் காட்டுப்பகுதிகளில் அமைந்துள்ள 2 ரயில் வழித்தடங்களில் ரயில்கள் மோதி யானைகள் உயிரிழப்பது அதிகமாக நடந்துள்ளது. தமிழக எல்லையிலுள்ள எட்டிமடை ரயில் நிலையம், கேரளா எல்லையிலுள்ள வாளையார் ரயில் நிலையம் ஆகிய இரு ரயில் நிலையங்களுக்கு இடையில் ஏ மற்றும் பி என 2 வழித்தடங்கள் 7 கி.மீ. தூரத்துக்கு அமைந்துள்ளதாக வனத்துறையினர் கூறுகின்றனர்.

ரயில் பாதைகளை ஒட்டி யானைகள் வரும்போது, அவற்றை சியர்ச் லைட் மற்றும் பட்டாசுகள் வெடித்துத் துரத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ள வழித்தடக் காவலர்கள் (Track Watchers) நியமிக்கப்பட்டனர். இதற்கு ஓரளவுக்குப் பலன் கிடைத்தது. இருப்பினும் 7 கி.மீ தூரமுள்ள 2 ரயில் வழித்தடங்களிலும் ரயில்கள் வரும்போதெல்லாம் ஆட்களை வைத்து, யானைகளைக் கண்காணித்துத் துரத்துவதில் பல நடைமுறைச் சிரமங்கள் இருந்தன.

AI கட்டுப்பாட்டு மையம் எவ்வாறு செயல்படுகிறது?

2023ஆம் ஆண்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பத்தை வைத்து, யானைகளைக் கண்காணிக்கத் தமிழக வனத்துறை திட்டமிட்டது. அதற்காக வாளையார் அருகேயுள்ள நவக்கரை வனப்பகுதியில் AI கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டது.

ஏ மற்றும் பி வழித்தடங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கேமராக்கள் இரவு நேரங்களிலும், யானையின் உடல் வெப்பத்தை வைத்து, அவற்றைக் கண்டறியும் திறனுள்ளவை. இந்தத் கேமராக்கள் AI கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தலா 2 பேர் விதமாக 24 மணி நேரமும் இவற்றைக் கண்காணித்து வருகின்றனர்.

"யானைகள் ரயில் தடத்துக்கு அருகில் செல்லும் பட்சத்தில் மையத்திலுள்ள அலாரம் அலறுகிறது. உடனடியாக எந்த வழித்தடத்தில் எந்த இடத்தில் எவ்வளவு தூரத்தில் யானை இருக்கிறது என்பது ஏஐ தொழில்நுட்பம் மூலம் கண்டறியப்பட்டு, தானியங்கி முறையில் (Automatic Messages) ரயில்வே துறையினருக்குத் தகவல் கொடுக்கப்படுகிறது"

உடனடியாக லோகோ பைலட் எனப்படும் ரயில் ஓட்டுநருக்கு, ரயில் நிலைய மேலாளரிடமிருந்து தகவல் தரப்பட்டு, குறிப்பிட்ட பகுதியில் ரயிலை நிறுத்தவோ அல்லது மிகவும் மெதுவாக இயக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் இந்தத் தகவல் தமிழக வனத்துறையின் வனவருக்கும் செல்கிறது. இவ்விரு வழித்தடங்களிலும் 25 டிராக் watchers பணியில் உள்ளனர். அவர்களில் அப்பகுதியில் பணியில் இருப்பவர்களுக்கு வாக்கி டாக்கி அல்லது அலைபேசியில் தகவல் தரப்பட்டு, ரயில் தடத்திற்கு அருகிலுள்ள யானைகளைத் துரத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதுபற்றி விளக்கிய AI கட்டுப்பாட்டு மையத்தின் ஊழியர் சந்தோஷ், "2024 பிப்ரவரியிலிருந்து இந்த மையம் செயல்படுகிறது. தமிழக வனத்துறையும், ரயில்வே துறையும் இணைந்து எடுத்துள்ள இந்தக் கூட்டு முயற்சியால் அப்போதிலிருந்து இப்போது வரையிலும் 8750 முறை, யானைகள் இவ்விரு ரயில் பாதைகளைக் கடந்தும் ரயில் மோதி காட்டுயானை இறக்கும் நிகழ்வு நடக்காமல் தடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

இந்த மையம் செயல்படத் துவங்கியதிலிருந்து இப்போது வரை ரயில் மோதிக் காட்டுயானை இறந்ததாக ஒரு நிகழ்வும் பதிவாகவில்லை என்று தமிழ்நாடு சுற்றுச்சூழல், காவல்நிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாவும் தன்னுடைய சமூக ஊடகப் பக்கத்தில் விரிவான தகவல்களைத் தொடர்ந்து பதிவிட்டு வருகிறார்.





■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.



விருதுநகர் எழுப்புதல் ஜெப மையத்தின் அருகில் நமது வளாகத்தில் அமைந்துள்ள
ஆசீர்வாத மையத்தில் வைத்து மார்ச் மாதம் ஆசீர்வாதம் டிவியின்
உபவாசக் கூட்டம் நடைபெற்றது. அதில் அநேக தேவப்பிள்ளைகள் கலந்துகொண்டு
ஆசீர்வாதங்களையும் விடுதலையையும் பெற்றுச் சென்றனர்.
தேவன் மகிமையடைந்தார்!

சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!

முதல் ஆராதனை : காலை 5 மணி முதல் 6 மணி வரை
இரண்டாம் ஆராதனை : காலை 7 மணி முதல் 9 மணி வரை
மூன்றாம் ஆராதனை : காலை 10 மணி முதல் 12 மணி வரை

சென்னை:
தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 10.

மேலும் விபரங்களுக்கு :
93456789 83
9994 07 9994

விருதுநகர் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரம்!

காலை 10 மணி
முதல் 12 மணி வரை

விருதுநகர்:
ஆசீர்வாத மையம்
எழுப்புதல் ஜெப மையம் அருகில்,
கூலக்கரை,
விருதுநகர்.